


மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி ஆற்காடு மேற்கு ஒன்றியம் பகுதிகளில் உள்ள வாக்காளப் பெருமக்களுக்கு மற்றும் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு முன்னாள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் – இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி நன்றி தெரிவித்தார். இதில் ஒன்றியச் செயலாளர் ஏ.வி. நந்தகுமார், ஜி.கே.குமுமம் சந்தோஷ், காந்தி, ஒன்றிய துணைத் தலைவர் ஸ்ரீமதி நந்தகுமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### பண்பாட்டுப் படையெடுப்பின் தொடக்கமா? முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில்

# தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாம் இடத்துக்குத் தள்ளுவதா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம்!

சென்னை, மே 12-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள கண்டன அறிக்கையில், முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்துக்குத் தள்ளுவதா? என்று தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களது பதவியேற்பு விழாவில், இதற்கு முன் எப்போதும் நடந்திராத "திடீர் மாற்றம்" - விழாவின் தொடக்கத்திலேயே நடைபெற்றதோடு, விழா முடிவிலும் அதைக் காண முடிந்தது. தமிழ்நாட்டின்மீது மீண்டும் ஹிந்தி, சமஸ்கிருத ஆர்.எஸ்.எஸ். கொள்கைப் பண்பாட்டின் ஆதிக்கம் தொடங்கி உள்ளது.

**நமது கண்டனத்தைப் பதிவு செய்யவேண்டியது அவசியம்!**

தமிழ்நாட்டின் புதிய அரசுக்கு, குறிப்பாக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களுக்கு சுட்டிக்காட்டி (அதுவும் பதவியேற்ற அன்றே) நமது கண்டனத்தைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

'வந்தே மாதரம்' பாடல் சமஸ்கிருத, ஹிந்தி மொழிப் படையெடுப்பின் படையெடுப்பு ஆகும். (சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட



பாட்டு)

அதைவிட, 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல', நம் மொழி செம்மொழித் தமிழ் வாழ்த்தாம் "நீராரும் கடலுடுத்த" பாடல் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டதைப் பார்த்து, தமிழ் உணர்வாளர்களின் நெஞ்சம் கொதிக்கிறது!

இதுபோன்ற அவலங்கள் மீண்டும் தொடராது இருக்க வழிவகை காண வேண்டும்!

"மரபுகள் மாற்றப்பட்டதுதானா இவர்களால் சொல்லப்பட்ட மாற்றம்?" என்ற கேள்வி, தமிழ்நாடெங்கும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. இது எப்படி? ஏன்? ஏற்பட்டது என்பதை முதலமைச்சர் ஓர் அவசர விசாரணை நடத்தி, அது போன்ற அவலங்கள் மீண்டும் தொடராது இருக்க வழிவகை காணவேண்டும்!

**கவனச்சிதறல் இன்றி செயல்படவேண்டும்!**

விழா ஏற்பாட்டாளர்கள் யார்? 'லோக் பவன்' என்ற ஆளுநர் மாளிகையா? அல்லது தமிழ்நாடு அரசின் பொதுத் துறையா? (Public Department?) என்பதை விசாரித்து, நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தமிழ்நாட்டு மக்களின் உணர்வுக்கு எதிரான இத்தகைய பண்பாட்டு படையெடுப்பு மீண்டும் அரசு நிகழ்ச்சிகளில் ஏற்படாது - கவனச்சிதறல் இன்றி செயல்படவேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### எஸ்,ஆர்,பிரதர்ஸ் – சென்னை தெற்கு மாவட்டக் கழக இலக்கிய அணி துணை அமைப்பாளர்

# டி.எஸ்.ரவிச்சந்திரன் - ஆர்.பத்மவதி இல்லத் திருமண விழா!

## முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையேற்று வாழ்த்துகிறார்!

சென்னை, மே 12-

டி.எஸ்.ஆர். பிரதர்ஸ் சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் டி.எஸ். ரவிச்சந்திரன் - ஆர். பத்மவதி இல்லத் திருமண விழா நாளை (13.5. 2026 - புதன் கிழமை) காலை 6 மணி அளவில் சைதாப்பேட்டை பஜார் சாலை வர்த்தகர் அறக்கட்டளை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

சைதாப்பேட்டை து. துரை - து.திலகவதி ஆகியோரின் புதல்வி து.தமிழ்ச்செல்விக்கும் கர்நாடக மாநிலம், பெங்களூரு ராஜேந்திர பிரசாத் - இரா. கிருஷ்ணவேணி ஆகியோரின் புதல்வர் இரா.கார்த்திகேயனுக்கும் மணவிழா நாளை (13.5.2026 - புதன்) காலை



6 மணியளவில் சைதாப்பேட்டை வர்த்தகர் அறக்கட்டளை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு பகுதி செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி. மற்றும் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.பி.கோதண்டம் எம். நாகா, தா.மோகன்குமார், ஆர். கிருஷ்ணகுமார், கொட்டிவாக்கம் ம.பார்த்திபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழாவிற்கு சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையேற்று மணமக்கள் து.தமிழ்ச்செல்வி - இரா. கார்த்திகேயன் ஆகியோரை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் துணை மேயர் மு.மகேஷ்குமார் , ப.தாயகம்கவி, ச. அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகரராஜா, எஸ்.குணசேகரன், க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., வாசுகி பாண்டியன், எஸ். வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., அ.ம. துரைவீரமணி, ஜி.வெங்கடேசன், வேளச்சேரி வே. ஆனந்தம் எம்.சி., எம்.விநாயகமூர்த்தி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., சைதை சாதிக், நா.மணிகண்டன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், அஞ்சல் என்.ராமன், கோ.பாஸ்கரன்,

டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர். அருணகிரி, சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ். பாட்சா, வே.முருகன், ஆ.வரதன்,

கு.புகழ்வேந்தன், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார் ஆ.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ். ஜெ.சலாம், எஸ்.ரவி, க. உமாபதி, ஜி.யோவான், இரா.சுதாபிரியன், கே.எம். எஸ்.கணேசன், வே.ரமேஷ்குமார், கோட்டூர் ந.பாபு, மு.மகேஷ்லாரன்ஸ், ஏ. மஜித் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




# கோடை விடுமுறை : சென்னை - கன்னியாகுமரி இடையே சிறப்பு ரயில்: தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, மே 12 -

தெற்கு ரயில்வே கூறியிருப்பதாவது: கூட்ட நெரிசலை சமாளிக்க சென்னை எழும்பூர் கன்னியாகுமரி சென்னை எழும்பூர் இடையே அதிவிரைவு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

அதன்படி சென்னை எழும்பூர் கன்னியாகுமரி அதிவிரைவு சிறப்பு ரயில் (வண்டி எண்: 06045) மே 15, 22, 29, ஜூன் 5 ஆகிய நாட்களில் வெள்ளிக்கிழமைகளில் சென்னை எழும்பூரில் இருந்து நள்ளிரவு 11.50 மணிக்கு புறப்பட்டு நெல்லை சந்திப்பு ரயில் நிலையத்திற்கு 10.25 மணிக்கு வந்தடையும். பின்னர் 10.30 மணிக்கு புறப்பட்டு நாகர்கோவிலுக்கு 11.40 மணிக்கும் நண்பகல் 1 மணிக்கு கன்னியாகுமரி சென்றடையும்.

மறு மார்க்கத்தில் கன்னியாகுமரி எழும்பூர் அதிவிரைவு ரயில் (வண்டி எண்:06046) மே 17, 24, 31, ஜூன் 7 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் கன்னியாகுமரியில் இருந்து நள்ளிரவு 11.25 மணிக்கு புறப்பட்டு 12.55 மணிக்கு நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் வந்தடையும்.

பின்னர் 1 மணிக்கு புறப்பட்டு தாம்பரத்திற்கு காலை 10.15 மணிக்கும், சென்னை எழும்பூருக்கு நண்பகல் 11.30 மணிக்கும் சென்றடையும். இந்த 2 ரயில்களும் 4 சேவைகள் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில் இரண்டு அடுக்கு மற்றும் மூன்று அடுக்கு ஏசி பெட்டிகள் தலா 2, 10 இரண்டாம் வகுப்பு படுக்கை வசதியுள்ள பெட்டிகள், 3 பொது பெட்டிகள், 2 மாற்றுத்திறனாளிகளுக்கான இரண்டாம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும்.

# முதல் கதை!

இந்தியாவின் கடன் தொகை சுமார் ரூ.200-லட்சம் கோடிகள்
தமிழ்நாட்டின் கடன் சுமார் 10-லட்சம் கோடிகள்..
எந்த ஒரு நாடும் அல்லது மாநிலமும்
அதன் வளர்ச்சிக்காக
கடன் வாங்குவது இயல்பு தான்.

இன்னும் சொல்லப்போனால்
உலக வல்லரசாக இருக்கிற
அமெரிக்கா தான்
உலகிலேயே அதிகம் கடன்
வைத்திருக்கும் நாடாகும்.
ஒரு நாடோ அல்லது மாநிலமோ
அதன் வளர்ச்சிக்கும்
உட்கட்டமைப்புக்கும்
வாங்குகிற கடன்
மூலதனச் செலவாகவே
கருதப்படும்.

உதாரணத்துக்கு
ஒரு குடும்பம் நிலம் வாங்கவோ
அல்லது தங்கள் பிள்ளைகளின்
கல்விக்காகவோ அல்லது தொழில்
அபிவிருத்திக்காகவோ வாங்குகிற
கடன் மூலதனச் செலவாகி
எதிர்காலத்தில்
அது சொத்தாக உருவெடுக்கும்.

இது குடும்பங்களுக்கு மட்டுமல்ல!
8-கோடி மக்களைக் கொண்ட
தமிழ்நாட்டிற்கும் சரி
130-கோடி மக்களைக் கொண்ட
இந்திய நாட்டுக்குமே பொருந்துகிற
தத்துவமாகும்.
அந்த வகையில் தான்
எடப்பாடி இருந்த காலம்
வரையிலான கடனும் சரி
அதன் பிறகு வந்த
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
காலம் வரையிலான கடனும் சரி
மத்திய ரிசர்வ் வங்கி நிர்ணயம்
செய்துள்ள அளவுக்கு உட்பட்ட
கடன் அளவாகவே இருக்கிறது.

அந்தக் கடன் தொகைகளின்
துணையும்
சேர்ந்து தான் இரட்டை இலக்க
பொருளாதார வளர்ச்சி
இந்தியாவிலேயே தமிழ்நாடு தான்
கல்வி சுகாதாரம் தொழில் வளர்ச்சி
ஆகியவற்றில்
முன்னேறிய மாநிலம் என்கிற
சரித்திரச் சாதனையை
நிகழ்த்தியிருக்கிறது
இந்த அத்தனை விவரங்களையும்
முன்னாள் முதலமைச்சர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
முதல்
முன்னாள் நிதி அமைச்சர்
தங்கம் தென்னரசு வரை
பல முறை சட்டமன்றத்துக்கு
உள்ளேயும் வெளியேயும்
தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் இவை அனைத்தையும்
தெரிந்து கொண்டே



6-சிலிண்டர் தருவேன்
மகளிர் உரிமைத் தொகையை
ரூ.2500 ஆக உயர்த்தித்
தருவேன்
வேலையில்லாமல் இருப்பவர்கள்
தொடர்ந்து வேலைக்கே
செல்ல வேண்டாம் என்கிற
மனநிலைக்கு ஆளாகும் வகையில்
மாதம் ரூ.4000 தருவேன்
தங்க மோதிரம் போடுவேன்
தாய்மாமன்
சீர் தருவேன் என்றெல்லாம்
ஆட்சியைப் பிடிப்பதற்காக
எல்லையில்லாது ஏகத்துக்கும்
அள்ளிவிட்ட
பக்கா மாஸ் முதல்வர் இப்போது
முதல்வர் இருக்கையில்
உட்கார்ந்த உடனே
மாநிலத்தின் கடன் தொகையை
காரணங் காட்டி
பல்டி அடிக்கிறார்.
வெள்ளை
அறிக்கை என வியாக்யானம்
பேசுகிறார்...

அதுசரி
ரூ.5000 கோடி அளவுக்கு
சொத்து வச்சிருக்கும்
இந்த கேரியரின் உச்சம் தானே
தன்னோட அப்பா அம்மாவுக்கே
கடன் கொடுத்திருப்பதாக
தேர்தல் அஃபிடவிட்ல
கதை சொன்னவர் .

இப்ப ஒருவழியாக
திமுக கூட்டணிக் கட்சிகளின்
கருணையில்
முதல்வர் நாற்காலியில் உட்கார்ந்த
வேகத்தில்
அதே கடனை வைத்து
கதை அளக்கத்
தொடங்கியிருக்கிறார்...

இருக்காதா பின்ன!
கதையும் நடிப்பும் தானே அவரது
வாழ்நாள் மூலதனம் ..
அதனால இனி நித்தம் நித்தம்
கதையும் கேட்கலாம்
"கோட்"முதல்வரது
நடிப்பையும் பார்க்கலாம்...

என்னநாஞ்
சொல்றது...



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட கழக வேட்பாளர் மருத்துவர் ஏ.பி.பூர்ணிமா வாக்காளர்களுக்கு அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் தலைமையில் வீதி வீதியாகச் சென்று நன்றி தெரிவித்தார். உடன் வட்டக் கழக செயலாளர்கள், எல்.பி.எப்.மோகன் உள்ளிட்ட அனைத்து அணியினர், வழக்கறிஞர் ஏ.புருஷோத்தன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.